<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 455/2019 நாள்: 26.08.2025 பி.வா.சா.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்பாதுரை | தொழில் | : | பத்திர எழுத்தர் |
| த/பெ | : | வேலுசாமி | கிராமம் | : | அமணலிங்க நாடார் வீதி, உடுமலைபேட்டை |
| வயது | : | 65 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>முதல் விசாரணை –</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமான கிரைய ஒப்பந்தம் நான் தான் தயாரித்தேன். மேற்படி ஆவணத்தில் கிரையம் முடிக்க இருக்கும் வாதி கிரைய காலக்கெடுவிற்குள் மீத கிரையத்தொகையை செலுத்தி கிரையத்தை முடித்துக்கொள்ளவில்லை என்றால் கிரைய முன்தொகையை வாதி இழந்துவிடுவதுடன், மேற்படி கிரைய உடன்படிக்கை செல்லத்தக்கதல்ல என்று வாசகம் உள்ளது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் 35 ஆண்டுகளாக பத்திர எழுத்தராக உள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தை நான் தான் தயார் செய்தேன். 2வது, 3வது முன்தொகை சம்பந்தப்பட்ட ஒப்பளிப்பு எங்கள் அலுவலகத்தில் உள்ளவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பளிப்பு வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் தாவா சொத்தை

கிரையம் கொடுப்பதற்காக தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.22 லட்சத்திற்கு தாவா சொத்தை கிரையம் பேசியதாக ஒப்பந்தத்தில் எழுதியுள்ளேன். கிரைய முன்தொகையில் ரூ.10 லட்சத்தை ஆக்சிஸ் வங்கி, உடுமலைபேட்டை காசோலை வாதியால் பிரதிவாதிக்கு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீத தொகை ரூ.12 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டாவது முன் தொகை ரூ.7 லட்சம் ஆக்சிஸ் வங்கி, உடுமலைபேட்டை காசோலை மூலமாக வாதியால் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3வது கிரைய முன் தொகையாக ரூ.3.50லட்சம் மேற்படி ஆக்சிஸ் வங்கி மூலமாக வாதியால் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.